

திருவள்ளூர் ஜே.என். சாலையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் கூட்டுறவு துறை சார்பில் 72 ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் 2124 பயனாளிகளுக்கு ரூ.23.81 கோடி மதிப்பீட்டில் பல்வேறு கடனுதவிகளை வழங்கினார் உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், சட்டமன்ற உறுப்பினர்கள் திருத்தணி எஸ்.சந்திரன் வி.ஜி.இராஜேந்திரன் , இணைப்பதிவாளர் பா.ஜெயஸ்ரீ கூடுதல் பதிவாளர்/மேலாண்மை இயக்குநர் ஆ.க.சிவமலர் நகர்மன்ற தலைவர் பா.உதயமலர் பாண்டியன், துணை தலைவர் சி.சு.ரவிச்சந்திரன், திருத்தணி சரகம் துணைப் பதிவாளர் சி.அமுதா. உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அரசு அலுவலர்கள் உள்ளனர்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று (14.11.2025) வடபழனி ஆண்டவர் திருக்கோயில் சார்பில் புதிதாக தொடங்கப்பட்டுள்ள ஓதுவார் பயிற்சிப் பள்ளியை தொடங்கி வைத்து, தேர்வு செய்யப்பட்டுள்ள 3 ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். உடன் ஆணையர் பி.என். ஸ்ரீதர், துறை இயக்குநர் திருமதி எஸ். வளர்மதி, கூடுதல் ஆணையர் திருமதி சி. ஹரிப்ரியா, திருக்கோயில் தக்கார் ல. ஆதிமூலம், இணை ஆணையர் சு. மோகனசுந்தரம், திருக்கோயில் துணை ஆணையர் / செயல் அலுவலர் இரா. ஹரிஹரன், உதவி ஆணையர் பாஸ்கர், மாநகராட்சி மன்ற உறுப்பினர் எஸ். பாஸ்கர் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

### 11 ஆம் வகுப்பு பயிலும்

# 5,34,017 மாணவ, மாணவியருக்கு ரூ 241 கோடியில் மிதிவண்டி வழங்கும் திட்டம்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, நவ.15-**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் 2025- 2026 ஆம் கல்வியாண்டில் அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் பகுதியாக அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11-ஆம் வகுப்பு பயிலும் 5,34,017 மாணவ, மாணவியருக்கு 241 கோடி ரூபாய் செலவில் மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைக்கும் அடையாளமாக 1,448 மாணவ, மாணவியருக்கு மிதிவண்டிகளை வழங்கினார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.11.2025) சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா மாதிரி மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக் கல்வித்துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறைகளின் சார்பில் நடைபெற்ற பள்ளி மாணவ - மாணவியருக்கு மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் 2025 - 2026, சிறந்த பள்ளிகளுக்கான விருது 2024 - 2025 மற்றும் குழந்தைகள் தின விழாவில் தமிழ்நாடு முழுவதும் 2025- 2026 ஆம் கல்வியாண்டில் அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் பகுதியாக அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11- ஆம் வகுப்பு பயிலும் 5,34,017 மாணவ, மாணவியருக்கு 241 கோடி ரூபாய் செலவில் மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைக்கும் அடையாளமாக 1,448 மாணவ, மாணவியருக்கு மிதிவண்டிகளை வழங்கினார்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாட்டில் மேல்நிலைக் கல்வியை ஊக்குவிக்கும் வகையில், பள்ளிகளுக்கு மாணவ, மாணவியர் சிரமமின்றி சென்று வர உதவியாக, அரசு, அரசு உதவி பெறும் மற்றும் பகுதியாக அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 11-ம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் இதர பிரிவைச் சார்ந்த அனைத்து மாணவ, மாணவியருக்கும், எவ்வித வருமான உச்சவரம்பின்றி ஆண்டுதோறும் மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் கடந்த நான்கு ஆண்டுகளில் 1,092 கோடி ரூபாய் செலவில் 22 இலட்சம் மாணவ, மாணவியருக்கு மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

2025-2026 ஆம் கல்வியாண்டில் 11 ஆம் வகுப்பு பயிலும் 2,38,967 மாணவர்கள் மற்றும் 2,95,050 மாணவியர் என மொத்தம் 5,34,017 மாணவ, மாணவியருக்கு 241 கோடி ரூபாய் செலவில் மிதி வண்டிகள் வழங்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் சிவகங்கை மாவட்டத்தில் 4,938 மாணவர்கள் மற்றும் 6,511 மாணவியர் என மொத்தம் 11,449 மாணவ, மாணவியர்களுக்கு 5.18 கோடி ரூபாய் செலவில், மிதிவண்டிகள் வழங்கப்படவுள்ளன.

துணை முதலமைச்சர் அவர்கள் குழந்தைகள் தினமான நேற்று சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா மாதிரி மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அரசு, அரசு நிதி உதவி மற்றும் பகுதியாக நிதி உதவி பெறும் 8 பள்ளிகளைச் சேர்ந்த 576 மாணவர்கள் மற்றும் 872 மாணவிகள் என மொத்தம் 1448 மாணவ, மாணவியருக்கு மிதிவண்டிகளை வழங்கி, தமிழ்நாடு முழுவதும் 2025-2026 ஆம் கல்வியாண்டில் அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் பகுதியாக அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11ஆம் வகுப்பு பயிலும் 5,34,017 மாணவ, மாணவியருக்கு 241 கோடி ரூபாய் செலவில் மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைத்தார்.

**சிறந்த 114 பள்ளிகளுக்கு கேடயம்**

அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் கல்விப் பணியில் முன்னேற்றம் காணவும், பள்ளிகளிடையே போட்டி மனப்பான்மையினை ஊக்குவிக்கவும், ஒவ்வொரு ஆண்டும் மாவட்டத்திலுள்ள 3 சிறந்த பள்ளிகளைத் தெரிவு செய்து மாவட்ட வாரியாக சுழற்கேடயங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

2024-25 ஆம் கல்வியாண்டில் ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சி மற்றும் அரசு நிதியுதவி பெறும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்த மொத்தம் 114 பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு துணை முதலமைச்சர் அவர்கள் கேடயங்களை வழங்கினார்.

**குழந்தைகள் தின விழா**

சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேருவின் பிறந்த நாளான நவம்பர் 14 குழந்தைகள் தினமாக கொண்டாடப்படுகிறது. குழந்தைகள் தினத்தையொட்டி இன்றைய விழாவில் நாட்டரசன்கோட்டை கே.எம்.எஸ்.சி மேல்நிலைப்பள்ளி மாணவிகளின் பரதநாட்டியம், கோட்டையூர் சி.சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவிகளின் நாட்டுப்புற பாடல், தேவகோட்டை புனித மரியன்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவிகளின் நடனம், மரகாத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மாணவியின் பேச்சு ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

கலைநிகழ்ச்சிகளில் பங்குபெற்ற மாணவ, மாணவியரை துணை முதலமைச்சர் அவர்கள் பாராட்டி கேடயங்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார், எஸ்.மாங்குடி, பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலாளர் மருத்துவர் பி. சந்தர மோகன், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் எ.சரவணவேல்ராஜ், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, காரைக்குடி மாநகராட்சி மேயர் சே.முத்துதுரை, துணை மேயர் ந. குணசேகரன், தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் பூ.ஆ.நரேஷ், பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் ச. கண்ணப்பன், மாவட்ட வருவாய் அலுவலர் மரு. எஸ். செல்வசுரபி, சார் ஆட்சியர் ஆயுஷ் வெங்கட் வட்ஸ், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அ. பெரியண்ணன்

**நவம்பர் 15 (1996)**



புதுக்கோட்டை மாவட்டக் கழகச் செயலாளராக 1974ஆம் ஆண்டு முதல் பல்லாண்டு காலம் தொடர்ந்து பணியாற்றியவர்.

நெருக்கடிநிலையின்போது மிசாவில் கைதாகி ஓராண்டு சிறையில் இருந்தவர்.

இருமுறை சட்டப்பேரவை உறுப்பினராக திறம்பட பணியாற்றியவர்.

1996ஆம் ஆண்டு கழக ஆட்சி அமைந்தபோது அரசின் கொறடாவாக பணியாற்றினார்.

“அந்தோ, புதுக்கோட்டை பெரியண்ணன் மறைந்தார். இது செய்தி அல்ல. என் இதயத்தில் மட்டுமல்ல கழக உடன்பிறப்புக்கள் எல்லோரின் இதயத்திலும் மூண்டுவிட்ட செந்தீ! இளமை முதல் நெருப்பாற்றில் நீந்தி பெரியாரின் கொள்கைகளை, அண்ணாவின் கோட்பாடுகளைக் காத்த மாவட்டத்தின் புலிப்போத்து அவர்” என்று தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.

தலைவர் கலைஞர் அவர்கள் இவருக்கு தலைமைக் கழகத்தின் சார்பில் ‘அண்ணா விருதி’னை வழங்கி சிறப்பித்தார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### பேரரசர் பெரும்பிடுகு

# முத்தரையர் நினைவாக அஞ்சல்தலை வெளியிட வேண்டும்!

## ஒன்றிய அமைச்சர்க்கு அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கடிதம்!

*சென்னை, நவ.15*

“பேரரசர் பெரும் பிடுகு முத்தரையர் நினைவாக அஞ்சல்தலை வெளியிட வேண்டும்” என்று பிற் படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், ஒன்றிய நாடாளுமன்ற விவகாரங்கள் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

கி.மு. 8ஆம் நூற்றாண்டில் திருச்சிராப்பள்ளி பகுதியை ஆண்ட புகழ்மிகு தமிழ் மன்னர் பேரரசர் பெரும் பிடுகு முத்தரையர் நினைவை போற்றும் வகையில் அஞ்சல்தலை வெளியிட வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன், ஒன்றிய நாடாளுமன்ற விவகாரங்கள் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு அவர்களுக்கு



நேற்று (14.11.2025) இது தொடர்பாக கடிதம் அனுப்பியுள்ளார்.

**வரலாற்று முக்கியத்துவம்**

முத்தரையர் வம்சத்தின் சிறந்த குறுநில மன்னரான பெரும் பிடுகு முத்தரையர், நீதியான நிர்வாகி, வீரமிக்க போர்வீரர், கலை மற்றும் விவசாயத்தின் பாதுகாவலராக தமிழ் மரபில் போற்றப்படுகிறார் என்று குறிப்பிட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள், செண்டலை, நார்த்தாமலை மற்றும் காவிரி வடகரையில் உள்ள பல இடங்களில் காணப்படும் கல்வெட்டுகள், அவரது ஆட்சி, கோயில் வழங்கல்கள் மற்றும் பாசனப் பணிகள் குறித்து சான்று பகர்கின்றன. அவரது பாசனப் பணிகள் இப்பகுதியை தானிய களஞ்சியமாக மாற்றின என்றும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

“பெரும் பிடுகு” என்ற பொருள் “மாபெரும் இடி” என்பதாகும். இப்பட்டம் அவர்தம் சமகாலத்தவர்களிடையே ஏற்படுத்திய பிரமிப்பையும் மதிப்பையும் வெளிப்படுத்துகிறது.

இன்றும், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் நாட்டுப்புறப் பாடல்களும் கோயில் திருவிழாக்களும் அவரது நினைவை உயிரோடு வைத்துள்ளன. பேரரசர் பெரும் பிடுகு முத்தரையர் அவர்களுக்கு நினைவு அஞ்சல்தலை வெளியிடப்படுவதன் மூலம்,

- அங்கீகாரம்: தேசிய கட்டுமானத்திற்கு ஆரம்ப கால தமிழ் மன்னர்களின் பங்களிப்பு அங்கீகரிக்கப்படும்;
- கல்வி: இடைக்காலத்திற்கு முந்தைய தமிழ் அரசியல் மற்றும் பண்பாட்டைப் பற்றி இளைய தலைமுறையினருக்கு விழிப்புணர்வு ஏற்படும்;
- ஒருங்கிணைப்பு: தமிழ்நாட்டினை இந்தியாவின் ஏனைய பகுதிகளுடனான உணர்வுபூர்வ ஒருங்கிணைப்பை வலுப்படுத்தும்,

என்று பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

நினைவு அஞ்சல்தலை வடிவமைப்பிற்கு தேவையான காப்பக ஆவணங்கள், நிபுணர் ஆலோசனை மற்றும் வடிவமைப்பு உள்ளீடுகள் உட்பட அனைத்து தேவையான ஒத்துழைப்புகளையும் தமிழ்நாடு அரசு வழங்கத் தயாராக உள்ளது என்றும், ஒன்றிய அரசின் சாதகமான பதிலை எதிர்பார்க்கிறோம் என்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

### தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு

# அகவிலைப்படி உயர்வு - முதல்வருக்கு நன்றி!

## தமிழ்நாடு அரசு பொது நூலகத்துறை பணியாளர் தலைவர் மு.ராஜேஷ்குமார் அறிக்கை!

*சென்னை, நவ.15-*

தமிழ்நாடு அரசு பொது நூலகத் துறை பணியாளர் கழக (சி மற்றும் டி பிரிவு) மாநிலத் தலைவர் மு. ராஜேஷ்குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு 01.07.2025 முதல் முன் தேதியிட்டு 55% லிருந்து 3% உயர்த்தி 58% ஆக அகவிலைப்படி உயர்வு அறிவித்து அரசு ஊழியர்களின் பாதுகாவலர் என நிரூபித்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், நிதி அமைச்சர் அவர்களுக்கும், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களுக்கும் தமிழ்நாடு அரசு பொது நூலகத்துறை பணியாளர் கழகம் சி&டி. யின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




**தி.மு.க.**
**இளைஞர் அணி**

**புதிய நிர்வாகிகளுக்கான**
**2026 தேர்தல் பணி பயிற்சி பாசறைக் கூட்டம்**

**இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு**

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், 2026 சட்டமன்றத் தேர்தல் பணிகள் குறித்து, புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான பயிற்சிப் பாசறைக் கூட்டங்கள், பகுதி வாரியாக நடைபெற உள்ளன. மண்டலம்–1, சென்னை வடக்கு மாவட்டத்துக்கு உட்பட்ட இராயபுரம் கிழக்குப் பகுதி, மேற்குப் பகுதி, பெரம்பூர் வடக்குப் பகுதி, தெற்குப் பகுதி, ஆர்.கே.நகர் கிழக்குப் பகுதி மற்றும் மேற்குப் பகுதி ஆகிய பகுதிகளில் பயிற்சிப் பாசறைக் கூட்டம் கீழ்க்காணும் தேதிகளில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | பகுதி | இடம் |
|---|---|---|---|
| 15.11.2025 சனிக்கிழமை | மாலை 5.00 மணி | இராயபுரம் கிழக்குப் பகுதி | மைனா பார்ட்டி ஹால், ஜி.ஏ.சாலை, பழைய வண்ணாரப்பேட்டை. |
| 16.11.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | பெரம்பூர் வடக்குப் பகுதி | இராமசாமி திருமண மண்டபம், முத்துக்குமாரசாமி கல்லூரி எதிரில், கொடுங்கையூர். |
| | மாலை 5.00 மணி | ஆர்.கே.நகர் கிழக்குப் பகுதி | செல்வ வாணி மஹால், மணிக்கூண்டு அருகில், தண்டையார்பேட்டை. |
| 22.11.2025 சனிக்கிழமை | மாலை 5.00 மணி | பெரம்பூர் தெற்குப் பகுதி | சீலம் மஹால், எத்திராஜ் சாமி சாலை, கொடுங்கையூர். |
| 23.11.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | ஆர்.கே.நகர் மேற்குப் பகுதி | மரியம் மாளிகை, எண்ணூர் நெடுஞ்சாலை, கொருக்குப்பேட்டை |
| | மாலை 5.00 மணி | இராயபுரம் மேற்குப் பகுதி | ஸ்ரீபேலஸ் திருமண மண்டபம், சூரிய நாராயண தெரு, இராயபுரம் |

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 12.11.2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி